**தம்பலகமம் பிரதேச சபை - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தம்பலகமம் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தம்பலகமம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்@ராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 14 எண்ணிக்கையான கூட்டு மொத்தம் ரூபா 829,240 ஆன நிலையான சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் தளபாடங்களும் பொருத்துக்களும் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 14 பொருட்களில் 1 வருடத்திற்கு மேற்பட்ட ஆயுள் காலத்தினைக் கொண்ட சொத்துக்களை நிலையான சொத்துக்களாக காட்டப்படும். | நிலையான சொத்துக்கள், கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டில் சேதனப் பசளை செயற்திட்டத்திற்கென ரூபா 1 மில்லியன் செலவு மேற் கொள்ளப்பட்டதாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும் ரூபா 498,443 ஆன வேலை நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | சேதனப் பசளை உற்பத்திக்கென ரூபா 286,406 வரையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு அலுவலகத்தில் வைக்கப் பட்டிருப்பதுடன் ரூபா 498,443 தற்போது பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு வருவதனால் இவ் வேலைகள் நிறை வடைந்தவுடன் உரிய நோக்கத்தினை பூர்த்தி செய்யமுடியும் | செலவினங்கள் ஏற்படுகின்ற போது உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டுள்ள இறைச்சிக்கடை குத்தகை மற்றும் உரிமைக் கட்டண வருமானம் தொடர்பில் நிதிக்கூற்றுக்களிற்கும் | 2021ம் ஆண்டு இறைச்சிக் கடை கிடைத்தும் நடத்த முன் வராதவர்களின் கேள்வி வைப்புப் பணமானது அவர்களுக்கு மீள வழங்கப் படாது அவை சபை வருமானமாக மாற்றப்பட்ட போது அது இறைச்சிக் கடை குத்தகை வருமானமாக காட்டப்பட்டுள்ளது. | பதிவேடு மற்றும் கணக்குகள் சரி செய்யப்பட்டு மீதிகளை சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| பதிவேட்டிற்கும் இடையில் ரூபா 1,094,752 வேறுபாடு காணப்பட்டுள்ளது. | சில அறுவைக் கட்டணங்களும் தவறுதலாக இறைச்சிக் கடை குத்தகை வருமானமாக காட்டப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான காரணங்களே பதிவேட்டு மீதிக்கும் நிதிக்கூற்று மீதிக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு காரணமாகும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் இல 571 | 998,340 | வைப்பிளிடப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட அனைத்து வைப்புக்களும் கடந்த வருடம் கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது அரசிறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத் திற் கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானங்கள் ரூபா 8,461,631 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 6,165,297 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) வீதவரி மற்றும் வரி | | |
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கு அமைய பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் | எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் மீது வரி அறவிடுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது | சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

ஆ) வாடகை

| | | | |
|---|---|---|---|
| i) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 129(2)(ஊ) ஆம் பிரிவின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்குரிய அறவிடவேண்டிய வாராந்தச் சந்தை வாடகை ரூபா 121,200 அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாராந்த சந்தை வாடகையானது ரூபா. 184,300 அறவிடப்பட்ட போதும், 2020ம் ஆண்டுக்கான நிலுவையாக காட்டப்பட்ட 121,200 தொகையினை அறவிட முடியா நிலையேற்பட்டது. இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ii) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இறைச்சிக்கடை குத்தகையாக பெறவேண்டிய ரூபா 3,552,966 வினை 1 தொடக்கம் 4 ஆண்டுகளிற்கு மேலாக இறைச்சிக்கடை உரிமையாளர் களிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வில்லை. | மேற்படி நிலுவைகள் தொடர்பாக, அவற்றை மீளப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

இ) உத்தரவுப் பத்திரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| 1988 இன் பிரதேச சபைகள் சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்குரிய வியாபார உரிமக் கட்டண நிலுவை ரூபா 150,600 சபையினால் அறவீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | சில வியாபார நிலையங்கள் மூடப்பட்டதன் காரணமாகவும், வியாபார உரிமம் அறவிட முடியவில்லை. இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்;ர் கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டில் அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா | சபையின் வருமானம் குறைவடைந்து காணப் பட்டமையினால் உள்@ர் கடன் அபிவிருத்தி நிதியத் | உள்ளுர் கடன் அபிவிருத்தி நிதியத்துடன் கலந்துரையாடி உரிய |

| | | | |
|---|---|---|---|
| | 11,800,224 கடன் தொகை மற்றும் 2021 டிசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 2,483,385 வை இன்றுவரை கொடுத்துத் தீர்க்க சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திடமிருந்து பெற்ற கடன், அதற்கான வட்டியினையும் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 93,571,416 தொகையான போதிலும், அதற்காக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் காணிகளின் உறுதியை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்களின் விபரம் நிலையான சொத்து பதிவேட்டில் பதிவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | சேதனப்பசளை தயாரிக்கும் செயற்திட்டத்திற்கென ரூபா 1 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 95 - கல்மட்டியாவ வடக்கு பிரதேசத்தில் 3 ஏக்கர் காணி சபைக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சேதனப் பசளை உற்பத்திக்கென ரூபா 286,406 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு அலுவலகத்தில் வைக்கப் பட்டிருப்பதுடன் ரூபா 498,443 விற்கு தற்போது பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு வருவதனால் இவ்வேலைகள் நிறைவடைந்தவுடன் உரிய நோக்கத்தை பூர்த்தி செய்ய முடியும் | உரிமைமாற்ற உரிய நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கொவிட் 19 தொற்று நிலையினால் கடைகள் மூடப்பட்டிருந்த காலத்திற்கு கடை ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 3,506,456 பெறுமதியான கழிப்பீடுகள் உரிய அதிகாரிகளிடமிருந்து முன்னனுமதி யின்றி நிதிக்கூற்றில் கழித்துக் காட்டப்பட்டுள்ளது. | கழிவுகள் தொடர்பாக அனுமதி பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள ப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் கிராமிய வீதி அபிவிருத்தி செயற் திட்டத்தின் கீழான 37 வீதிகளின் கொங்கிறீட்டிடல் கிரயம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட தவறு ஏற்றுக்கொள்ளப்பட்டு 2022ம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உள்வாங்கப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் ரூபா 64,800 ஆன நில அளவை கணக்கெடுப்புக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தும் நூலக சாலை, கல் மட்டியாவ<br><br>பொதுக்கிணறு மற்றும் கொம்போஸ்ட் வேலைத்தளத்திற்குரிய காணிகளின் | குறித்த இடங்களுக்குரிய நில அளவை செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய நில அளவை படம் நில அளவைத்<br><br>திணைக்களத்தினால் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நில அளவைப்படம் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நில அளவைப்படம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | மகாகண சபைகள் மற்றும் உள்;ராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் PL/15/පොහ් இலக்க 2021.06.18 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக, சேதன பசளை உற்பத்தி செயற் திட்டத்திற்கென ரூபா 1 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், சேதனப்பசளை தயாரித்து விற்பனை செய்தல் இதுவரை நடைபெறவில்லை. | நிதி பற்றாக்குறையாக உள்ளது. அத்துடன் சேதன கழிவுகளை LDSP வேலைத்திட்டதின் கீழ் COMPOSE MAKING இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணைச் சட்டங்கள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை 5 விடயங்களுக்காக மாத்திரம் துணைச் சட்டங்கள் விதிக்கப் பட்டிருந்தன. இதனால் மிகுதி 25 உபவிதிகளும் அனுமதிக்கப்படாததனால் அதனால் கிடைக்கும் வருமானத்தை அறவிடமுடியாமலுள்ளது. | முதற்கட்டமாக 5 விடயங்களை நிறை வேற்றுவதற்கான துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய விடயங்களுக்கான துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதன் நடைமுறைகள் பின் பற்றப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் | துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டு தேவையான மேற்பார்வை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | **பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் செய்யப்படாமை**<br>சபையில் காணப்படும் மோட்டார் சைக்கிள், இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் இரண்டினை திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது 04 வருடம் தொடக்கம் 13 வருட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது. | திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | வாகன திருத்தம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ஆ) | **சொத்துக்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வருமானங்கள் பெற்றுக் கொள்ளாமை**<br>தம்பலகமம் பிரதேச சபையின் பொதுச்சந்தைக் கட்டடம் ரூபா 5,978,814 இற்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் அக்கட்டடத்தினை வாடகைக்கு வழங்கி | எமது சபைக்கு சொந்தமான குறித்த பொதுச்சந்தைக் கட்டடத்தை வாடகை அல்லது குத்தகை | கட்டடத்தினைப் பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| வருமானம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடிப்படையில் வழங்க ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டுள்ளது. | வேண்டும். |
| இ) வருடாந்த பொருட்கள் / இருப்புக்கள் மீளாய்வு | | |
| 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு 2021 ஆம் ஆண்டு முடிவடைந்திருந்த போதிலும் இருப்புக் கணிப்பீட்டு சபையினால் முன்வைக்கப்பட்ட சிபாரிசுகள் 2022 மே 31 வரை நடைமுறைபடுத்தப் பட்டிருக்கவில்லை. | 2021ம் ஆண்டு இருப்பு கணிப்பீட்டுச் சபையின் அறிக்கையின் அடிப்படையில் தற்போது தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இருப்புக் கணிப் பீட்டறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்க ப்படல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) விளையாட்டு மைதானம் புனரமைப்பு - ரூபா 1,500,000 | | |
| கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் கல்மெட்டியாவ தெற்கு, யுனைட்டட் விளையாட்டு கழக மைதானத்தை புனரமைப்பதற்காக ரூபா 1,500,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. கூட்டுமொத்தம் ரூபா 479,908 ஆன வேலைகள் நிறைவேற்றப்பட்டதினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. மேற்படி வேலை ரூபா 1,218,730 இற்கு முடிவுற்றிருந்ததுடன் கணக்காய்வு திகதியான நாளது வரை குறிப்பிட்ட நோக்கத்திற்கென பூரண பயன்பாட்டை பெற்றிருக்கவில்லை. | கல்மெட்டியாவ தெற்கு யுனைட்டைட் விளையாட்டு கழக மைதானம் புனரமைக்கப்பட்டு குறிப்பிட்ட கழகத்திடமே மைதானம் கையளிக்கப்பட்டுள்ளது | மைதானத்தை பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ஆ) 2021.09.29 ஆம் திகதிய, 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.1 இற்கமைவாக பிரதேச சபைத் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதிகளுடன் மூன்று பேர்களைக் கொண்ட குழுவொன்றின் மூலம் வழங்கப்படாது சமூக அடிப்படையிலான நிறுவனங்களிற்கும் சனசமூக உத்தியோகத்தரின் சிபாரிசுகளின் அடிப்படையில் கூட்டுமொத்தம் ரூபா 82,991,952 பெறுமதியான ஒப்பந்தங்கள் வழங்கப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. இரண்டு | 2021.09.29 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் படி சனசமூக நிலையங்களுக்கான ஒப்பந்த வேலைகள் வழங்க முன்பு சங்கங்களின் செயற்பாட்டுத் தன்மை மற்றும் இயங்கும் தன்மை என்பவற்றை அறிந்து கொள்வதற்காக விண்ணப் பப்படிவம் வழங்கப்பட்டு CDO வின் சிபார்சு பெறப்பட்டு பின்பு சனசமூக நிலையங்களுக்கு ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| **அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்** | | |
| ஆரம்ப நிலை மட்டத்தில் 2 பதவி வெற்றிடமும் 7 மேலதிக பணியாளர்களும் இரண்டாம் நிலை அலுவலர் மட்டத்தில் 3 பதவி வெற்றிடங்களும் 4 மேலதிக ஆளணி காணப்படுகின்றது. | இரண்டாம் மட்டத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் தலா ஒருவரும் மூன்றாம் மட்டத்தில் சாரதி ஒருவருக்குமான பற்றாக் குறை காணப்படு கின்றமையினால் அதனைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | பற்றாக்குறையாக உள்ள வெற்றிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த நடவடிக்கை களுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022ம் ஆண்டுக்கான பாதீட்டின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க உரிய நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்@ராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வாளரினால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது உள்ளக கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்வதற்காக உள்ளகக்கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொள்ளப்பட்டு இந்த நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கைக் கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்கள சுற்றறிக்க இலக்கம் DMA/01-2019 இன் பிரிவு 5.3 இன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் இரண்டு கூட்டங்கள் மட்டுமே மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்தது. | அடுத்து வரும் ஆண்டுகளில் சுற்றறிக்கைக்கு அமைவாக முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.4 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையினால் அதன் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் காட்டுப் பகுதியில் வகைப்படுத்தப்படாது கொட்டப்பட்டு வருவதுடன் சபையினால் உரிய திண்மக்கழிவு முகாமைத் துவத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் காணியினை சபைக்கு விடுவிக்குமாறு தம்பலகம பிரதேச செயலாளருக்கு விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் பிரதேச காணி கையளித்த பின்னர் திண்மக் கழிவு முகாமைத்துவம் உரிய முறையில் நடைபெற வாய்ப்பாகும். | சட்டத்தின் படி உரிய நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும். |

### 4.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2017 இன் 19ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சட்டத்திக்கு அமைவாக, 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை சபையினால் தயாரித்து அது தொடர்பான முன்னேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் சபையினால் தயாரிக்கப்பட்டு அது தொடர்பான முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |